MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# சூல் புதினத்தில் சமூகம்

**செல்வி.கு.நந்தினி**

**உதவிப் பேராசிரியர்**
**தமிழ்த்துறை, ஸ்ரீ நேரு மஹா வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,மலுமிச்சம்பட்டி, கோவை -641050**

# Society in the Sool Pudinam

**Ms. K. Nandini**

**Assistant Professor**
**Tamil Department, Sri Nehru Maha Vidyalaya College of Arts and Science, Malumichampatti, Coimbatore -641050**

## ABSTRACT

Literature aims to convey the values of life and to help people understand the shortcomings of society. Novels help to a great extent in understanding the lives of people, especially in terms of their regional development. Novels are seen as a way to provide a complete understanding of the people of a particular caste and ethnicity. These types of novels have social thoughts embedded in various aspects of life from birth to death, and in this way, So Dharman categories have been included.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

**முன்னுரை**

இலக்கியங்கள் வாழ்க்கை நெறிமுறைகளை உணர்த்தவும் சமூகத்தின்மைகளை மக்கள் புரிந்து கொள்ளவும் தனிமனிதனின் இலக்கை

எடுத்து இயம்புவதையும் குறிக்கோளாக கொண்டிருந்தன நாவல்கள் மக்களின் வாழ்க்கை புரிந்து கொள்ள பேரளவில் துணை செய்கின்றன குறிப்பா அதன் வட்டார வளர்ச்சி கருவாக கொண்டு புதினங்கள் குறிப்பிட்ட பகுதி சாதி இன மக்களை பற்றிய முழுமையான புரிதலை தருவன வாய் காணப்படுகின்றன இவ்வகையான புதினங்கள் பிறப்பு முதல் இறப்பு வரையினான பல்வேறு வாழ்வில் சமூக சிந்தனைகளை உள்ளமைப்புகளால் கொண்டுள்ளன அந்த வகையில் சோ தர்மன் பிரிவுகள் இடம்பெற்றுள்ளன.

**சமுதாயமும் சமூகமும்**

சமூகம் என்பது ஆங்கிலத்தில் கம்யூனிட்டி என்றும் சமுதாயம் என்பதற்கு சொசைட்டி என்றும் பொருள்படுகிறது. ஒரு குறிப்பிட்ட இன மக்கள் ஒரு ஊரிலும் அல்லது ஒரு இடத்திலும் குழுவாக ஒன்றாக சேர்ந்து வாழ்வதுதான் சமூகம் இந்த குழுக்கள் தன்னை பேணாது பாதுகாத்துக் கொள்வதற்கும் தங்களுக்கு பண்பாட்டை அழியாமல் தக்க வைத்துக் கொள்வதற்கு கொள்ள ஒன்றாக இணைந்துள்ள.ஒரு மாநில குழு என்னும் கூறலாம் இவர்கள் ஒரு குறிப்பிட்ட பரப்பளவில் மட்டும் வசிப்பவர்கள் . பல சமூகங்கள் ஒன்றாக சேர்ந்து வாழும் பகுதி சமுதாயம் வேண்டாம் குறிப்பிட்டு இனம் என்று இல்லாமல் மாறுபட்ட பண்பாடுகளைக் கொண்ட மக்கள் பரவி வாழும் பகுதியை சமுதாயம்.

**சிந்தனை**

சிந்தனை என்பதற்கு எண்ணம்,தியானம் ,கவனம் குறிக்கும் செய்தி என பல விளக்கங்கள் தருகிறது .ஆங்கிலத்தில் thinking என்று பொருள் .தீர்வின் அடிப்படையில் உள்ளவற்றை ஆராய்வது சிந்தனை எனப்படுகிறது. ஒரு மனிதன் சிந்தனை எது குறித்து வேண்டுமானாலும் இருக்கலாம். ஒரே சிந்தனையை கடைசி வரை கண்டுபிடிப்பவர்களும், அல்லது ஒரு வேலையை செய்வதற்கு பல சிந்தனைகளைக் கடைப்பிடிப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் .இதனை சோ.தர்மன் நாவல் வாயிலாக அறிய முடிகிறது .சோ.தர்மன் நாவல்களில் சமுதாய சிந்தனைகள் சோ.தர்மனின் நாவலில் வெளிபட்டுள்ள சமுதய சிந்தனை பல கூறாகப் பிரித்து அறியலாம்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

. சோ தர்மன் நாவல்களில் முதன்மை கருப்பொருளாய் முன்நிற்கின்றன. சமூகத்தின் மதிப்பீடுகள், மனித சமூகத்தின் மீதான எதிர்ப்புகள்,வாழ்வியல் சார்ந்த நெருக்கடிகள் ஆகியவை நாவல்கள் வழியாக சோ தர்மன் மக்களுக்கு மட்டும் கருத்து ஓட்டமாக விளங்குகிறது. சிறிய நிகழ்வுகள் கூட சமூகத்தில் ஒரு மனிதனை எப்படி எல்லாம் மடை மாற்றுகின்றன என்பதை தெளிந்த காட்சி கோர்வையோடும், நாவல்களுக்கு உரித்தான

வர்ணனைகளோடும் வெளிப்படுத்தும் போது நாவல்படிக்கும் வாசகன் தன் வசப்படுகின்றான்.

### சமூகத்தில் பெண்கள்

"மங்கையராகப் பிறப்பதற்கே

நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா " 1

என்று பெண்ணின் பிறப்பையே பெரும் பேறாய் கருதிப்பாடினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

அன்னை தெரேசா உலகிலுள்ள அநாதைக் குழந்தைகளுக்கும் ஆதரவற்ற அனைத்து உள்ளங்களுக்கும் கருணையுள்ள தாயாகத் திகழ்ந்தார்

இப்புதிணத்தில் வரும் கொப்புளாய் மற்றும் மாடத்தி போன்ற பெண்கள் அறவணர்வோடும் மனிதநேயத்தோடும் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துரைக்கின்றார்.

### கொப்புளாயி

இப்புதினத்தில் உள்ள கொப்புளாயி தனக்கு குழந்தை இல்லாத காரணத்தால் தன்னுடைய கணவனுக்கு தன் தங்கையை திருமணம் செய்து வைக்கிறாள் .தனக்கு குழந்தை இல்லை என்ற வருத்தத்தை எதிர்கொண்டு உயிரினங்களின் மீது அன்பை செலுத்துகிறாள்.

### அறச்செயல்

உருளை குடி கிராமத்தில் வசிக்கும் கொப்புளாயி தனக்கு குழந்தை இல்லாத காரணத்தால் கவலையை மறக்க எருமை மாடுகளை தன்னுடைய பிள்ளைகளாக எண்ணி தன்னுடைய நேரங்களை அவைகளுடன் செலவழித்தால்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

எப்பொழுதும் கொப்புளாயின் வீடடில் உள்ள எருமை மாடுகளில் இருந்து கிடைக்கும் தயிர், பால் போன்றவற்றை தான் மட்டும் உண்ணாமல் அதனை ஊர் மக்கள் அனைவருக்கும் கொடுப்பாள். பின்பு ஒரு நாள் கோடை காலத்தின் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. கருவ மரத்தடியில் கொப்புளாகி அமர்ந்திருந்தாள். அந்த வழியாக செல்லும் பக்தர்கள் நடைபாதையாக வெள்ளிக்கிழமை தோறும் இருக்கங்குடி மாரியம்மன் கோயிலுக்கு சென்றார்கள். இதனை பார்த்துக் கொண்டிருந்த கொப்பளாயி மறு வெள்ளிக் கிழமை இரண்டு பெரிய மொடாப்பானை நிறைய்ய மோரும், மோந்து குடிக்க இரண்டு மண் கலயங்களும் வைத்தாள்

கொப்புளாயி. கூட்டம் தாகம் தணித்து இளைப்பாறி நடையைக் கட்டியது மாரியாத்தாள் கோவிலுக்கு. வெள்ளிக்கிழமை தோறும் கோவிலுக்குப் போகிற ஜனங்களின் வாயில் கொப்புளாயி என்கிற பெயர் உச்சரிக்கத் தொடங்கியது. அரசல் புரசலாக மாரியம்மன் கோவிலுக்கும் எட்டிவிட்டது கொப்புளாயின் பெயர். இருக்கங்குடி மாரியம்மன் கோவிலில் பிரபலம் வெள்ளரிப் பிஞ்சும் மருக்கொழுந்தும். கோவில் கும்பிட்டு திரும்புகிறவர்கள் தேடி வந்து தருகின்ற திருநீறும், குங்குமமும், வெள்ளரிப் பிஞ்சும். மருக்கொழுந்தும் கொப்புளாயியின் வீட்டில் நிறைந்துவிட்டன.

நூல்.பு.ப.121

இவ்வாறான அறச்செயல்களை செய்யக்கூடிய கொப்பளாயி தாகத்தை தணிக்கும் தாயாக விளங்குகின்றாள். அதுமட்டுமல்லாது அவர்கள் இளைப்பாறுவதற்கு தேவையான வாகை மரக்கன்றுகளை நட்டு அதனை தானே வளர்க்கிறாள்.

தோப்பாய் மாறிய மரக்கூட்டங்களுக்கு நடுவே ஊரார் ஒன்றுகூடி சிறிய தெலாக் கிணறு ஒன்றை வெட்டினார்கள். ஆழமில்லாத அந்தத் தெலா கிணற்றில் இருக்கங்குடி மாரியாத்தாளும் கொப்புளாயியும் தண்ணீராய்ப் பொங்கி வந்து ஆயிரமாயிரம் மனிதர்களின், வழிப்போக்கர்களின், கால்நடைகளின் தாகம் தீர்த்தார்கள். வெய்யிலுக்கு நிழலானார்கள், மரங்களாகவும் நின்றார்கள்.

நூல்.பு.ப.122

எந்த ஒரு சுயநலம் இன்றி உருளை குடி கிராம மக்கள் பசியற்று வாழ வேண்டும் என்ற சிந்தனையோடு வாழ்ந்து வருகிறாள். உயிரினங்களுக்கு மட்டும் தாய் அல்ல ஊருக்கே தாயாக வாழ்கிறாள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

**எதிர் காலத்தை நினைத்து ஏற்படும் அச்சம்**

மனிதநேய பண்போடு வாழ்ந்து கொண்டிருக்கும் கொப்பளாயி தன்னுடைய எதிர்காலத்தில் நினைத்து சிந்தித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் தன்னுடைய வளர்ப்பு மகனாகிய காட்டுப்பூச்சி பொறுப்பில்லாமல் இருப்பது எண்ணி வருந்தி கொண்டிருந்தாள். அப்பொழுது தன்னுடைய மற்ற பிள்ளைகளான எருமை மாடுகளையும்,நந்தவான்களையும் தனக்குப் பிறகு யார் பார்த்துக் கொள்வது என்று எண்ணி அவருடைய அச்சம் அதிகரித்தது .அதற்காக ஒரு முடிவு எடுக்கிறாள். தன்னுடைய தங்கை மகனிடம் எருமை மாடுகளை ஒப்படைக்கிறாள். பிறகு நந்தவனத்தை யாரிடம் ஒப்படைப்பது என்று எண்ணிக்

கொண்டிருக்கிறாள். அதை கண்ட காட்டுப்பூச்சி கொப்பளாயி முகம் வாடி இருந்த**தை** உணர்ந்தான். உடனே கொப்பளாயின் அருகில் சென்றுஅவளுடைய முகத்தையே உற்றுப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் காட்டுப்பூச்சி. அவளுடைய உதடுகள் மட்டும் இலேசாய் அசைந்தன. அதற்குள்ளாக அவளுடைய கன்னங்கள் வழியே கண்ணீர் வழிவதைக் கண்டு பயந்துபோனான்.

'எதுக்கு பெரிஞ்ஞ இப்பிடி திடுதிப்னு அழுற.'

காட்டுப்பூச்சிப் பயலை தன் ஓரத்தில் இருத்தி தலையைக் கோதி விட்டாள். இழுத்து இறுக்கி அணைத்துக்கொண்டாள். வாஞ்சை யுடன் ஒரு தாயைப்போல் மேலெல்லாம் தடவி உச்சி முகர்ந்தாள். 'டேய், காட்டுப்பூச்சி, எனக்குப் புள்ள கொல்லி கெடையாது.செத்தா கொல்லி வைக்கக்கூட கொழந்த கெடையாது. தங்கச்சி புள்ளைக இருந்தாலும், தன் புள்ளையாகுமா? அதனால நான் சொல்றத கவனமா கேளுடா. எருமைக எல்லாமே என்னோட புள்ளைங்கதான். அத எல்லாத்தையும் தங்கச்சி மககிட்ட ஒப்படைச் சிட்டன். அதே மாதிரி இந்த நந்தவனமும், அதுல இருக்கிற மரம், செடி, கொடிகளும் என்னோட புள்ளைங்கதான், நிய்யி ஊரவிட்டுப்போகாம இங்கயே இருந்தா ஒங்கிட்ட ஒப்படைச்சிட்டு நிம்மதியா கண்ண மூடுவன். என்னடா சொல்ற.இனிமேப்பட, நான் வெளியூரு போகமாட்டன் பெரிஞ்ஞ, நிய்யி அழுவாத, எல்லாத்தையும் நான் பாத்துக்கிறன்.' பாத்துக்கிறன்.

(சூல்.பு.ப167)

தன்னுடைய மனம் பாரம் குறைந்தது அச்சம் நீங்கி மன நிம்மதியுடன் இருந்தால் கொப்புளாயி.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

சிறுதானிய வியாபாரம்

உலகில் அதிகமாக பயிரிடப்படும் இரண்டாவது தானிய பொருளாக சிறுதானியங்கள் உள்ளது.சிறு தானிய பொருட்கள் கிடைப்பது என்பது அரிதாக தான் உள்ளது. ஆகையால் தற்போதைய சூழலில் நீங்கள் சிறு தானிய பொருட்களை பயன்படுத்தி சுய தொழில் செய்வதன் மூலமாக தொழிலில் நல்ல முன்னேற்றத்தைக் காண்பதோடு மட்டுமின்றி உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உறுதுணையாக அமையும்

உருளை குடி கிராமத்தில் பல்வேறு வியாபாரிகள் விற்பனை செய்து வருவார்கள் .அவர்களுள் வெயிலாம்பிள்ளை மற்றும் சின்னத்தம்பி நாடார் இருவரும் சிறுதானிய வியாபாரிகள் அவர் .

மொச்சப் பயறு, தட்டப் பயறு, பாசிப் பயறு, சீனிக் கிழங்கு, ஓடியா, ஓடியா. பயறுபச்ச எடைக்கு எடை, கிழங்கு நாலெடை, ஓடியா, ஓடியா.'

சின்னத்தம்பி நாடார் கூவிக்கொண்டே முன்னால் வர, கடகாப் பெட்டியை சுழந்தபடி வந்து கொண்டிருந்தார். (சூல்.பு.ப.246)

இவர்கள் இருவரில் வெயிலான் பிள்ளையின் சிறுதானியங்களில் உயிர் உள்ள அனைவரும் வாங்கி உண்டு மகிழ்ந்தனர்.

**பனை மரத்தில் செய்யக்கூடிய கைவினைப் பொருட்கள்**

இயற்கை வளங்களை பண்பாட்டு படைப்புகளாகவும். கலை படைப்புகளாகவும், மாற்றிக் கொள்வதையே புழங்குபொருள் சார் பயன்பாடு (Material Culture) என்கிறோம் வீட்டில் உள்ள தானியங்கள் காய்கறிகள் என சில பொருட்களை வைக்க பனை ஓலையில் செய்யப்பட்ட கூடைகள். முறங்கள், பெட்டிகள், போன்றவற்றை பயன்படுத்தப்பட்டன ஒரு பனைமரத்திலிருந்து பதநீர், பனை நார், பனை ஓலை, கிடைக்கின்றன. இவைகளை வைத்து மக்களின் பயன்பாட்டுக்கு ஏற்ப பொருட்கள் செய்யப்படுகின்றன. பனைமரத்தின் அடியில் விழும் ஓலைகளை மிதித்து காயவைத்து பனை மட்டைகளில் இருந்து நார் உரிப்பது சோத்துநார், சொதி நார், முதுகு நார் என நான்கு வகையாக பிரித்து எடுப்பது என்பது "சூல்" நாவலின் கதைக்களமாக கொண்டு "சங்கராபுரம்" என்ற ஊரில் முத்து. சித்திரை இருவரும் இணைந்து செய்யும் வேலை ஆகும். அவரில் கீழ்த்தட்டு மக்களின் பெரும்பாலான தொழிலாகும் நார் பெட்டி, விதை பெட்டி குத்திகாய்ச்சும் பெட்டி, கடைவாய் பெட்டி பரிசு பெட்டி, கல்யாண பெட்டி, விட்ட சுளகு. புடைக்கும் சுளகு, என பலவிதமான பெட்டிகளை பனை நார்களில் செய்தனர் என்பதை குறிப்பிடப்படுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

**நகரமயமாதல்**

நாளுக்கு நாள் நகர்ப்புற மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே வருகிறது. வேலை வாய்ப்புகளுக்காகவும் கல்விக்காகவும் நகரங்களை நோக்கி வந்து கொண்டே இருக்கின்றனர். நகரமயமாதல் உணவு, உடை, இருப்பிடம் ஆகிய அனைத்தும் அன்றாட வாழ்க்கையில் போதுமான அளவு இல்லாத காரணத்தால் நகரங்களில் நோக்கி குடியேறக்கூடிய சூழல் உருவாகிறது. ஒவ்வொரு கிராமங்களும் இயற்கை பேரழிவின் காரணத்தினாலும், செயற்கை விதை உற்பத்தியின் காரணத்தினாலும் ,விவசாய மாற்றத்தினாலும் நகரமயமாதல் ஆகிறது.

**உருளை குடி கிராமம் நகரமயமாதல்**

இயற்கையோடு இணைந்து மன்னர் ஆட்சி முறையில் வாழ்ந்து கொண்டிருந்தனர் .பழமையான நாகரீகம் ,பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கம், நம்பிக்கைகள் ஆகியவை பின்பற்றி வாழ்வாதாரங்களை

மேற்கொண்டனர். பின்பு மன்னராட்சி ஒளிந்து மக்களாட்சி மலர்ந்து கொண்டிருந்த காலத்தில் புதிய நுட்ப மாற்றங்களை உருவாக்கியது.

**செயற்கை விதை வித்துக்கள்**

செயற்கை விதைகள் உயிருள்ள விதை போன்ற அமைப்பாகும், இது தாவர திசு வளர்ப்பிலிருந்து பெறப்பட்ட உடலியல் கருக்கள் ஒரு ஹைட்ரஜலால் இணைக்கப்பட்டு, மண்ணில் வளர்ந்தால் உண்மையான விதைகளைப் போல செயல்படும் மற்றும் இயற்கைக்கு மாற்றாக பயன்படுத்தப்படும். விதைகள். இடுப்பளவு உயரம் வளரும் நெல்பயிர்கள் மறைந்து முழங்கால் அளவு உயரம் மட்டுமே வளரும் நெல்லும், மூன்றே மாதத்திலும், இரண்டே மாதத்திலும் விளையும் விதம் பயறு வகைகளும், தங்களுக்கு எதற்குமே பயன்படாத சூரிய காந்தியும், மக்காச் சோளமும், நித்திய கல்யாணியும் வந்து சம்சாரி களின் நிலங்களை ஆக்ரமித்துக்கொண்டன. பாரம்பரிய தானியங்கள் குறைந்துகொண்டே வந்தன. எட்டு முழம் ஆழம் பூமிக்குள் செல்லும் வேர்கொண்ட கருங்கண்ணி, குப்பாம் பருத்தி வகைகள் மாறி உகண்டா என்கிற ரகம் ஊருக்குள் வந்துவிட்டது. இரண்டு பருப்பு உள்ள நிலக்கடலை மாறி மணிலாக் கடலை என்கிற கடலையில் மூன்று நான்கு பருப்புக்கள் நீளமாக இருந்தன.(சூல்.பு.ப484)

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

இயற்கை உரங்களை உபயோகப்படுத்தி உற்பத்தி செய்யும் விதைகளை மக்கள் பயன்படுத்தினர் அவரை மாறி குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் தரக்கூடிய விதைகளை பயன்படுத்துகின்றன என்பதை புத்தகத்தில் கூறப்படுகிறது.

**கண்மாய் தூர்வாரும் பணி**

தூர்வாரல் (Dredging) என்பது நீருக்கு அடியில் தோண்டும் நடவடிக்கை ஆகும். இது பொதுவாக ஆழமற்ற பகுதியை ஆழமாக்க மற்றும் நீர் தேக்கங்களிலுள்ள தேவையற்ற மணல் மற்றும் படிவுகளை அகற்றும் பணி ஆகும்.

'பரம்பரை நீர்ப்பாய்ச்சிட்ட நீ எப்பிடி சாவிய வாங்கலாம்?'

இனிமேப்பட எதுவுமே பரம்பரை கெடையாது. முந்தி கண்மாய மராமத்துப் பாக்கணும்னா மகாராசாட்டப் போயி கையக் கட்டிட்டு நிப்பம், வேல முடிஞ்சிரும், இப்ப அப்படி நிக்க முடியுமா, என்ன செலவு, எத்தன ஆள் வேணும், என்னென்ன சாமான்க வாங்கணும், மொத்தமா எவ்வளவு ரூபா ஆகும் அப்பிடினு, தனித் என்றுமதனியா எழுதி, நான் கையெழுத்துப் போட்டு பஞ்சாயத்து அதிகாரி கிட்ட கொடுத்து, அவரு அதச் சரி பார்த்துட்டு, மேல உள்ள அதிகாரிக்கு அனுப்பி, கலெக்டர் வரப் போயித்தான் ரூபா வரும். ரூவா வந்தப் பெறவு சுச்சி நாயக்கர் மாதிரி பெரிய புள்ளிக கையில ஒப்படைச்சு அந்த

வேலைய முடிக்கணும்னு சட்டம். அதனால இனிமேப்பட படிக்காத ஆட்களுக்கு வேல கெடையாது. கண்மாய்க்கு வாட்ச்மேன் கூடிய சீக்கிரம் வந்துருவான்.'

(சூல்.பு.ப.484)

மன்னர் ஆட்சி காலத்தில் ஊர் மக்கள் மற்றும் நீர் பாச்சியின் குடும்பம் பரம்பரை பரம்பரையாக தீர்ப்பாலும் பணியை செய்து வந்தனர் மக்களாட்சியில் அரசு கட்டுப்பாட்டில் கம்மாய் இருந்து வருகிறது அதனால் அரசு பணியாளர்களிடம் அனுமதி பெற்று தூர்வாரும் பணி நடைபெறுகிறது என்பதை புதினத்தில் காணப்படுகிறது.

**இன்றைய அரசியல்**

**முந்தைய காலத்தில் ஊருக்கு என்ன வோண்டும் என்றாலும் அரண்மனைக்கு சென்று மந்திரியை பார்ப்பார்கள் அல்லது மகா ராஜாவை பார்ப்பார்கள்.**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

**இந்த காலத்தில் யாரையும் நாம் பார்க்க வேண்டியஅவசியம் இல்லை. நம்மளே மந்திரிநம்மளே ராஜா என்கிற அரசியல் நிறைந்த உலகம் இது.**

**முடிவுரை**

**இலக்கியங்கள் காலத்தில் கண்ணாடி. அதில் சமூக என்பது ஒரு பிம்பம். இந்த சமூகத்தின் வாழ்க்கை நிலையையும், மக்கள் வாழ்வியலையும், சிந்தனை நுட்பத் திறனையும், சமூகம் சார்ந்த பெண்களின் வாழ்க்கைப் பதிவுகளையும் படம் பிடித்து காட்டுவதாக ஆசிரியர் சோ. தர்மன் நாவல்கள் வழி எடுத்து இயம்பி உள்ளார்**

**சான்றெண் விளக்கம்**

1. **நூல் ப. 121**
2. **மேலது ப. 122**
3. **மேலது ப. 167**
4. **மேலது ப. 246**
5. **மேலது ப. 484**
6. **மேலது ப. 484**